# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

பகுதி - I

14 x 1 = 14

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
   அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்
   இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்
2. கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்று வருவதே மரபு.
   கருத்து 2 : தொடரமைப்பு சங்கப்பாடல்களில் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது
   அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
   இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு
3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.
   அ) உரிமைத்தாகம் - 1. பாரசீகக் கவிஞர்
   ஆ) அஞ்ஞாடி - 2. பூமணி
   இ) ஜலாலுதீன் ரூமி - 3. பக்தவச்சல பாரதி
   ஈ) தமிழர் குடும்ப முறை - 4. சாகித்திய அகாதமி
   அ) 2,4,3,1 ஆ) 3,4,1,2 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1
4. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.
   அ) பாலை பாடினான் - 1) தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்
   ஆ) பாலைப் பாடினான் - 2) தேரினைப் பார்த்தான்
   இ) தேரை பார்த்தான் - 3) பாலினைப் பாடினான்
   ஈ) தேரைப் பார்த்தான் - 4) பாலைத் திணை பாடினான்
   அ) 4,1,3,2 ஆ) 2,3,1,4 இ) 4,3,1,2 ஈ) 2,4,1,3
5. சுரதா நடத்திய கவிதை இதழ்
   அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்
6. படிமம் என்பதன் பொருள்
   அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி
7. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
   அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாளி
8. தவறான இணையைத் தேர்க.
   *பா வகை* - *இலக்கியம்*
   அ) விருத்தப்பா - நாலடியார்
   ஆ) ஆசிரியப்பா - அகநானூறு
   இ) கலிவெண்பா - தூது
   ஈ) குறள் வெண்பா - திருக்குறள்
9. வேறுபட்டதைக் குறிப்பிடுக.
   அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
   இ) நடுக்காட்சி துணிப்பு ஈ) காட்சி மறைவு
10. ஆராய்ந்து சொல்கிறவர்
    அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர் இ) தூதுவர் ஈ) உறவினர்

Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
அ) கு.அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன்
இ) ஜெயமோகன் ஈ) எஸ்.இராமகிருஷ்ணன்

12. சங்க இலக்கியத்தில் அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்
அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை

13. ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய நூல்
அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

14. தொல்நெறி - இலக்கணக்குறிப்புத் தருக.
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) தொழிற்பெயர் ஈ) எண்ணும்மை

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

15. கலி விழா, ஒலி விழா - விளக்கம் தருக.
16. ஞாலத்தின் பெரிது எது?
17. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.
18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4

19. அக்காலத்துக் கல்வி முறையில் மனைப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?
20. சங்க காலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?
21. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

### பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

22. கலைச்சொல்லாக்கம் தருக.
அ) Archive ஆ) Fiction

23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
விலை, விளை, விழை

24. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.

தானே

25. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) ஈந்த ஆ) பேசுவார்

27. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) எத்திசை ஆ) பூம்பாவாய்

28. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
அண்ணனைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான

29. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடரமைக்க.
குழந்தை, நட, தளிர்நடை, விழு

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



30. *தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.*
வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக் குட்டியையும் கண்டேன்.

பகுதி - III

பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x4=8

31. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாகத் தமிழ்நதி கூறுகிறார்?
32. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
33. சினத்தினால் வரும் கேட்டினை எழுதுக.
34. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x4=8

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.
36. மயிலை சீனி.வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.
37. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.
38. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் - விளக்கம் எழுதுக.

பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3x4=12

39. நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.

*(அல்லது)*

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின் - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.

40. ***இலக்கிய நயம் பாராட்டுக. (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)***

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிற மொழிக்குச் சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்த அன்புரையால் உலுங்க வைத்தில்
உலகத்தில் தமிழ் மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன் இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வகவி பாரதி ஓர் ஆசான் திண்ணம். - **நாமக்கல் கவிஞர்**

41. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

*(அல்லது)*

ஆ) கூதிர் பாசறையைச் சான்றுடன் விளக்குக.

42. ***பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.***

அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

*(அல்லது)*

ஆ) யானைக்கும் அடி சறுக்கும்

43. ***பின்வரும் விடைகளுக்கேற்ற வினாக்களை அமைத்திடுக.***

1) குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.
2) நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.
3) 1856 இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.
4) சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாக பயணிக்கவும் உதவுகின்றன.

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



43. ***காதுகேளாதவர்களுக்கான மாற்று வினா.***

தமிழின் சிறப்புகளைப் பற்றி ஆய்வுகள் பல செய்தமையால் 'தமிழ் இமயம்' என்று தமிழறிஞர்களால் போற்றப்பட்டவர் வ.சுப.மாணிக்கம். 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற கொள்கையைப் பறைசாற்றுவதாகத் 'தமிழ்வழிக் கல்வி இயக்கம்' என்ற அமைப்பை நிறுவித் தமிழ்ச் சுற்றுலா மேற்கொண்டவர். அழகப்பா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும், முதல்வராகவும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றினார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகச் சிறப்புடன் செயலாற்றிய போது பல்கலைக்கழக நடைமுறைகள் தமிழில் இருக்க வேண்டும் என ஆணை பிறப்பித்ததுடன், அங்கு தமிழாய்வு நடைபெறவும் வழிவகுத்தார். திருவனந்தபுரத்தின் திராவிட மொழியியல் கழகத்தில் முதுபேராய்வாளராகப் பணிபுரிந்தபோது 'தமிழ் யாப்பியல் வரலாறும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

***வினாக்கள் :***

1. 'தமிழ் இமயம்' என்று போற்றப்பட்டவர் யார்?
2. வ.சுப.மாணிக்கனார் எந்தக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்?
3. _________ என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஆய்வு மேற்கொண்டார்.
4. 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற கொள்கைக்காக அவர் அமைத்த இயக்கம் எது?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 3 x 6 = 18

44. அ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.

***(அல்லது)***

ஆ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

***(அல்லது)***

ஆ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

46. அ) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? - விளக்குக.

***(அல்லது)***

ஆ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

## பகுதி - V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக:** 4 + 2 = 6

அ) குழல்வழி......... எனத்தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.

ஆ) 'உடைத்து' என முடியும் திருக்குறளை எழுதுக.

*********

ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர் ... சான்றோர் உடைத்து

www.Padasalai.Net
Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com